# இனப்பிரச்சனையால் ஆறுயிரம் தமிழர் கொலை!

(லண்டன்)

இலங்கையின் வடக்கு-கிழக்கில் நிலைமை மோசமடைந்து வருவதாகவும் 6000க்கு மேற்பட்ட தமிழர்கள் இனப்பிரச்சனையில் கொல்லப்பட்டுவிட்டதாகவும் 'றேடியோ ஒஸ்ரேலியா' கவலை தெரிவித்தது. தற்போதைய யுத்தம் எந்த

[4-ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 பங்குனி 29 நம்மான் 26 இதழ்: 61
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12-04-1991

# இரவு நேரங்களில்
## கைதாகும் தமிழர்கள்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை மாவட்டத்தில் வசித்து வருகின்ற தமிழர் இரவு நேரங்களில் படையினரால் கைது செய்யப்பட்டு கப்பம் பெற்ற பின்னர் விடுவிக்கப்படுகின்றனர்.

முஸ்லிம் ஊர்காவற்படையினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

கைது செய்யப்பட்ட சில

(4-ம் பக்கம் பார்க்க)

# மூன்று நாடுகளிலிருந்து ஆயுதங்கள் கொள்வனவு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்கு தேவையான ஆயுதங்களில் ஒரு பகுதி தற்போது அமெரிக்கா, சீனா, பெல்ஜியத்திடமிருந்து கொள்வனவு செய்யப்படுகிறது,

[4 ம் பக்கம் பார்க்க]

## வடக்கு கிழக்கில் தொடரும்
# தாக்குதலை உடன் நிறுத்துமாறு
# இந்திய அரசு வலியுறுத்து!

(புதுடில்லி)

**இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்துமாறு இந்திய அரசு இலங்கையை வற்புறுத்தியுள்ளது.**

இலங்கையில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையால் இந்தியாவில் ஈழத்தமிழ் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் எனவே இராணுவ நடவடிக்கையை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைக்கு தீர்வு காணுமாறும் இந்தியா கேட்டுள்ளது.

இராணுவத் தாக்குதல்களுக்கு, அஞ்சி இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்து தமிழ் நாட்டில் தங்கி

[4ம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தை நிறுத்த
## அரசு - புலிகள் ஆர்வம்?

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்களை நடாத்த புலிகளும், அரசும் முயற்சித்து வருவதாக பி. பி. ஸி தெரிவித்தது.

எனினும் இந்த யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையை யார் ஆரம்பிப்பது என்பதில் இரு தரப்பும் தயக்கம் காட்டுவதாவும் தெரிவிக்கப்படுகிறது

யுத்தம் ஒரு பக்கம் மிக கடுமையாக நடைபெற்றாலும் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க மூன்றும் தரப்புகள் முயல்வதும் குறிப்பிடத்தக்கது என்றும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. (சி)

# அன்னை பூபதி ஞாபகார்த்த பொது அறிவுப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள அன்னை பூபதி ஞாபகார்த்த பொது அறிவுப் பரீட்சை இன்று தமிழீழம் முழுவதும் நடைபெறுகின்றது.

இந்தப்பரீட்சை இதுவரை காலமும் தொடர்ந்துவரும் பொது அறிவுப் பரீட்சைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகவும் புதிய அணுகுமுறையிலும் நடைபெறுகின்றது.

பரீட்சை காலையும் மாலையும்

(4-ம் பக்கம் பார்க்க)

## மாந்தைப் பகுதியில்
# முன்னேறிய படையினரை வழிமறித்து புலிகள் சமர்!

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தைப் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் விமானங்களின் உதவியுடன் கனரக வாகனங்களில் வெளியே வர முற்பட்டபோது விடுதலைப்

(4-ம் பக்கம் பார்க்க)

# வீர வணக்கம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேறமுற்பட்டபோது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் நேற்று முன் தினம் வீரமரணமடைந்த குட்டி (செல்லையா இராஜேந்திரன்-நவக்கிரி, புத்தூர்), ரகுராம் (பழனிவேல் நந்தவர

(4-ம் பக்கம் பார்க்க]

# காரைநகர் குடிமனை நோக்கி பயங்கர பீரங்கித்தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

காரைநகர் கடற்பகுதியிலிருந்து நேற்று முன்தினமிரவு அகோர பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டது. 150 க்கும் மேல் பீரங்கிக்குண்டுகள் காரைநகரினுள்ளும், ஊர்காவற்துறைபகுதியிலும் வெடித்தது.

நேற்றுமுன்தினமிரவு சுமார் பத்து மணியளவில் ஆரம்பமான இத்தாக்குதல் நள்ளிரவு 2 மணிவரை நடாத்தப்பட்டது தொடர்ச்சியாக இத்தாக்குதல் நாடத்தப்பட்டது.

கசூரினா பீச், தாழையடி, மூடுசாந்து, கோவளம், வெளிச்சவீட்டு முனை, வேரப்பிட்டி, கடலிலிருந்து 10 க்கும் மேற்பட்ட பீரங்கி கப்பல்களிலிருந்து இத்தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டது.

இதேவேளை நள்ளிரவில் மூன்றுக்கும் மேற்பட்ட பாரிய குண்டுவெடிப்புகள் கடற்படை முகாம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பீரங்கித்தாக்குதலில் காரை

(4-ம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தை நிறுத்தியபின் பேச்சு ஆரம்பிக்கலாம்

(கொழும்பு]

வடக்கு - கிழக்கில் முதலில் அரசு யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தியபின் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கலா

(4-ம் பக்கம் பார்க்க)

# மண்டைதீவு கடற்பகுதியில் பல மீனவர்கள் கைது!

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவுப் பகுதியில் கடல்மார்க்கமாக வந்த படையினர் கடற்பகுதியில் நின்ற மீனவர்கள் பலரை நேற்றிரவு கைதுசெய்ததாகத் தெரியவருகிறது.

நேற்றிரவு ஏழுமணியளவில் விசைப்படகுகளில்வந்த படையினர் நடுக்கடலில் மீனவர்களைத் தடுத்து வைத்துள்ளனர்.

படையினரின் இந்நடவடிக்கையைத்தொடர்ந்துமண்டைதீவுப் பகுதியிலிருந்து நேற்று இரவோடிரவாக மக்கள்வெளியேறத் தொடங்கினார்கள்.

# உணவு முத்திரை
## தற்காலிக நிறுத்தம்

[காங்கேசன்துறை]

வறுமை நிவாரண உணவு முத்திரைகள் தற்காலிகமாகவே இடைநிறுத்தி வைக்கப்பட்டுஉளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டு விலையில் தரமான பொருட்களை உணவு முத்திரைக்கு வழங்கக்கூடிய நிலை ஏற்படும்போது அதற்கான பொருட்கள் விநியோகம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று ப.நோ. கூ. சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்டுப்பாடு விலையில் தரமான பொருட்களை உணவு முத்திரைக்கு விநியோகிக்க முடியாமலிருப்பதால் தற்கா

(4ம் பக்கம் பார்க்க)

# இடம்பெயர்ந்தோருக்கு நிவாரண உதவிகள்

(யாழ்ப்பாணம்)

இராணுவ முகாம்களை அண்மித்த பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கான அரசசார்பற்ற நிறுவனங்களின் நிவாரண உதவிகளை சுழற்சி முறையில் கிராமசேவை அலுவலர் பிரிவு ரீதியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக தென் இந்

[4-ம் பக்கம் பார்க்க)

பொது சன நூலகம் 12-4-1991

## வரி விளம்பரம்

### வாசகர் கருத்தரங்கு

மீரா வெளியீடாக வெளிவந்துள்ள நாவல்களில் நீங்கள் ரசித்துப் படித்த நாவல்களின் விமர்சனங்களை, கருத்துக்களை எழுதுங்கள். புதியதாக வெளிவரும் மீரா வெளியீடுகளில் பிரசுரிக்கப்படும். விரைவில் சிதம்பரம் திருச்செந்திநாதன் எழுதிய ''முள் முடி மன்னர்கள்.'' (சி 4636)

### பாலாஜி புத்தகசாலை

செங்கை ஆழியானின் யாக குண்டம், ஆறுகால்மடம், கந்தவேள் கோட்டம் மற்றும் புவியியல், வரலாறு முதலிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு. (புத்தாண்டை முன்னிட்டு விசேட தள்ளுபடி) 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (இ-4634)

## மண்ணெண்ணை கொண்டுவர அனுமதி

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு 120 பரல் மண்ணெண்ணையை கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கு யாழ். மாவட்ட அரச அதிபரின் அனுமதி கிடைத்துள்ளதாகவும், போக்குவரத்து தடைகளினால் இந்த மண்ணெண்ணையை ஏற்றிக் கொண்டுவருவதற்கு சென்ற லொறிகள் இடைவழியில் தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது (72)

## சுகாதார வாழ்வு மிக அவசியம்

[யாழ்ப்பாணம்]

ஆரோக்கியமான மனிதனாக வாழ்வதற்கு சுகாதாரம் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. கிராமப்புற மக்களிடையே சுகாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. சுகாதாரத்தை முறைப்படி பேணிநடப்போமாகில் நாம் நோய்நொடியற்ற மனிதனாக வாழலாம்.

இவ்வாறு குடும்பநல சுகாதார பரிசோதகர் திரு. ஆர். முருகானந்தன் தெரிவித்தார்.

ஏழாலை லெனின் சனசமூக நிலயத்தினுல் தலைவர் சின்னதம்பி சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற சுகாதார கருத்தரங்கில் தெல்லிப்பழை குடும்பநல சுகாதரப்பரிசோதகர் திரு. விவேகானந்தன் கலந்துகொண்டு சுகாதாரம் சம்பந்தமான பல கருத்துக்களை தெரிவித்தார்.

மேற்படி கருத்தரங்கின்

(4 ம் பக்கம் பார்க்க)

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேஷன் றோட், கோண்டாவில்.

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை
சகல வகுப்புக்களும் நடைபெறுகின்றன:

| | |
|---|---|
| விஞ்ஞானம்: | திரு. இரா. செல்வவடிவேல்<br>திருமதி உமாதேவி |
| கணிதம்: | திரு. இந்திரன்<br>திரு. லோகேஸ்வரன்<br>திரு. வாமதேவன் |
| தமிழ்: | திரு. பண்டிதர்<br>திரு. சுந்தரலிங்கம் |
| சமூகக்கல்வி: | திரு. வேலா<br>திரு. சிவநேசன்<br>செல்வி நிர்மலா |
| ஆங்கிலம்: | திரு. மகாலிங்கம்<br>திரு. ரமேஷ் |
| வர்த்தகம்: | திரு. நவம் |
| சமயம்: | திரு. பண்டிதர் |

எமது தனித்துவமான ஆசிரியர் குழுவினால் சிறந்த முறையில் கற்பிக்கப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு:

நிர்வாகி

(ஏ 1217)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை

## பொதுபட்டமளிப்பு-1990

டிப்ளோமாக்கள்/ பட்டங்கள்/ பட்டப்படிப்பின் டிப்ளோமாக்கள்/ முதுமாணி/ கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 1991 ஆடி மாதம் ஆறும் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 1991 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

1. கலாநிதித் தேர்வு
2. முது தத்துவமாணித் தேர்வு.
3. முது கலைமாணித் தேர்வு
4. முது விஞ்ஞானமாணித் தேர்வு
5. கல்விப் பட்டப்படிப்பின் டிப்ளோமாத்தேர்வு 1989
6. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணி தேர்வு 1989 / 90
7. பொதுக்கலைமாணித் தேர்வு 1989
8. பொதுவிஞ்ஞானமாணித் தேர்வு 1989
9. சங்கீதம் / பரதநாட்டியம் டிப்ளோமாத்தேர்வு 1989
10. சிறப்பு விஞ்ஞானமாணித் தேர்வு 1989
11. வணிகமாணித் தேர்வு 1989
12. தொழில் நிர்வாகமாணித் தேர்வு 1989
13. சிறப்பு கலைமாணித் தேர்வு 1988
14. சித்த வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணித் தேர்வு

விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். வேண்டுகோட் படிவங்களையும், மற்றும் விபரங்களையும், முத்திரை ஒட்டிய 23 x 10 செ. மீற்றர் அளவுடைய, சுயமுகவரியிட்ட கடித உறையை உபபதிவாளர்/தேர்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுக்கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

(ஏ 1222)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 01-06-1942

உதிர்வு: 12-04-1989

## திரு. க. செல்லத்துரை (B. A, Dip-in-Ed., M. A.)

(முன்னாள் அதிபர் யாழ்/மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்)

கோடிகள் எம்முன்னே வந்து குவிந்தாலும்
எம் மனத்தில் கோடியில் கூட மகிழ்வில்லை
துயில்கின்றோம், எழுகின்றோம், சிரிக்கின்றோம், வாழ்கின்றோம்.
நாம் வாழும் வாழ்க்கையிலே பல உணர்ச்சி காட்டுகின்றோம்
எல்லாமே கைதேர்ந்த நடிப்புத்தான் என்பதை
"அப்பா" நீங்களன்றி யாரறிவார்

என்றும் உங்கள் அன்பு நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(சி 4620)

# இஸ்ரேலில் விடுதலைப்புலிகள் ஆயுத பயிற்சி பெறவில்லை

## ரவிஜெயவர்த்தன சாட்சியம்

(கொழும்பு)

வடபகுதி தீவிரவாதிகள் எவரும் இஸ்ரேலில் ஆயுதப் பயிற்சி பெறவில்லை. இவர்கள் இஸ்ரேலில் பயிற்சி பெற்றனர் என்பது பொய் என முன்னாள் ஜனாதிபதியின் மகனும் அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகருமான திரு. ரவிஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை-இஸ்ரேல் உறவு தொடர்பாக கொழும்பில் நடைபெறும் விசாரணையில் சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்: புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் இஸ்ரேலின் கொள்கைக்கெதிரானவர். தமிழ்தீவிரவாதிகளுக்கு பயிற்சி வழங்க இஸ்ரேல் முன்வந்தாலும் பிரபாகரன் தனது இயக்கஉறுப்பினர்களை இஸ்ரேலுக்கு அனுப்பியிருக்கமாட்டார்.

வடபகுதி தீவிரவாதிகள் லெபனனில்பயிற்சிபெற்றனர். இஸ்ரேலில் அல்ல. புலிகள் இஸ்ரேலில் பயிற்சிபெற்றதாக கூறப்படுவதில் எதுவித உண்மையுமில்லையென்றும் அவர் கூறினார். (சி)

# அமெரிக்க விமானம் வீசிய உணவுப் பொதிகள் வீழ்ந்து 17 'குர்திஷ்' அகதிகள் பலி

(தெஹரான்)

ஈராக்கில் அவதியுறும் 'குர்திஷ்' இன அகதிகளுக்கு அமெரிக்க விமானங்கள் உணவுப் பொட்டலங்கள் போட்ட போது அது விழுந்து 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈரான்-துருக்கி எல்லையில் நேற்றுமுன்தினம் இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றுள்ளது. உணவுக்காக அங்குமிங்கும் ஓடித்திரிந்த நூற்றுக்கணக்கானோர் நிறைந்த பகுதியில் அமெரிக்கவிமானங்கள் பொட்டலங்களைப்போட்டன.

இப்பொட்டலங்கள் 'குர்திஷ்' இனத்தவர்கள்மீதுவந்து வீழ்ந்தது. இதனால் 17 அகதிகள் ஸ்தலத்திலே பலியானர்கள். (சி)

ஈழ அகதிகள்

## ஈழ அகதிகள் தேர்தலில் பங்கு பற்றத்தடை!

(சென்னை)

தமிழ்நாட்டில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கைத்தமிழ் அகதிகள் எவரும் தேர்தல் தொடர்பான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மாநில மறுவாழ்வுத்துறை சிறப்பாணையாளர் திரு. சி. என். ராம்தாஸ் தெரிவித்துள்ளார்.

## தனித்தமிழில் நற்சான்றிதழ்!

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் இதுகால வரையில் ஆங்கிலத்தில் நற்சான்றிதழ் வழங்கிய சமாதான நீதவான்கள்- வைத்திய அதிகாரிகள் கடந்தவாரம் முதல் தனித்தமிழில் நற்சான்றிதழ்களை வழங்க ஆரம்பித்துள்ளனர். பருத்தியடைப்பைச் சேர்ந்த ஒருவருக்கு இந்த தனித்தமிழ் நற்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. (59)

## இராசி பலன்

12.04.1991

வெள்ளிக்கிழமை

பூரட்டாதி பி. இ. 12.58 வரை, திரயாதசி பி. இ. 3.41 வரை சித்தயோகம் பிரதோஸவிரதம் இராகு காலம் காலை 10-36 முதல் 12-06 வரை சுபநேரம் காலை 6-06 முதல் 7.36 வரை.

மேஷம்: கடும்சினம், வாக்குகலகம், மனப்போராட்டம்.

இடபம்; வருவாய் அதிகரிப்பு, குடும்பசுகம், உல்லாசப் பயனம்.

மிதுனம்: வாக்குவன்மை, தொழில் சிறப்பு, இனசன வருகை.

கடகம்; கண்ணில் ரோகம், பகை மூட்டம், புத்திரர் கவலை.

சிங்கம்: இன சனப் பகை, வைத்தியசெலவு, தொழில் பாதிப்பு.

கன்னி: அதிகாரிகள் பாராட்டு, பணவரவு, தொழில் முடக்கம்.

[4-ம் பக்கம் பார்க்க]

# மகன் தாக்கி தந்தை பலி

(யாழ்ப்பாணம்)

சுத்தசுவாதீனமற்ற நிலையில் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுத் தப்பி ஓடிவந்த ஒருவர், தனது தந்தையை மண்வெட்டியால் வெட்டிக் கொலை செய்ய முயன்ற சம்பவத்தில் தலையில் படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று முன்தினம் மரணமானார்.

கடந்த 5 தினங்களாக இவர் சுய நினைவிழந்த நிலையில் சிகிச்சை பெற்றுவந்தபோதும் நேற்று மூன்தினம் பகல்11-00 மணியளவில் மரணமானார்.

கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா நாகரத்தினம் (வயது 55) என்பவரே இந்நிலைக்கு ஆளானவராவர். [56]

# கடத்தல், கொள்ளை, திருட்டுச் சம்பவங்கள் 40 தாய்லாந்துப் பெண்கள் கொழும்பில் கடத்தப்பட்டனர்

[கொழும்பு]

கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்த 40 தாய்லாந்து பெண்கள் காணமல் போய்விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது இவர்கள் கடத்தப்பட்டிருக்கலாமென்றும் கூறப்படுகிறது.

இவர்களுக்கும் சர்வதேச கடத்தல், கொள்ளை திருட்டுக் குப்பல்களுக்கும் தொடர்பு இருக்கலாமெனவும் பொலிசார் சந்தேகமடைந்ததைதொடர்ந்தே இவர்கள் காணமல் போய்விட்டனராம்.

இவர்களை தேடும் முயற்சியில் கொழும்பு பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதற்காகமேலதிகமாகபொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (சி)

# தமிழ்க்குழு உறுப்பினர்கள் 16 பேர் கைது!

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள ஈ. என்.டி எல் எவ். அலுவலகம் அண்மையில் முற்கையிடப்பட்டு 16 உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்

இவர்கள் மீது தற்போது விசாரணைகள் நடைபெற்று வருவதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பிலுள்ள ஏனைய தமிழ் குழுக்கள் மீதும் பலத்த கண்காணிப்பு போடப்பட்டுள்ளதாகவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

# ★ கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'மதலின'வில் வந்த 'ஆயுதம் இலங்கைக்கு இல்லையாம்?

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பெல்ஜிய கப்பலான 'எம்வி மதலின'வில் இலங்கைக்கு ஆயுதம் எதுவும் வரவில்லையாம்.

பெல்லிஜியத்திலிருந்து தாய்வான் நோக்கி 101 ஏதான் நவீன ரக ஆயுதங்களுடன் சென்ற இக்கப்பல் எண்ணெய் நிரப்பவே கொழும்பு துறைமுகப் வந்ததாம்.

சர்வதேச விதிமுறைப்படி கப்பலில் என்ன பொருட்கள் இருக்கின்றன என்பது பற்றி இலங்கை தரப்பிற்கு தெரிவிக்க வேண்டும். இதனை செய்ய கப்பல் கட்டன் தவறியதையடுத்தே கப்பல் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாம். (சி)

# இந்தியக் கொள்கையில் மாற்றம் வேண்டும்

[சென்னை]

இலங்கை தொடர்பான கொள்கையை இந்தியா மீளாய்வு செய்யவேண்டுமென முன்னாள் ராஜதந்திரிகள், கல்விமான்கள், பத்திரிகையாளர்களைக் கொண்ட குழுவொன்று வலியுறுத்தியுள்ளது

தலையிடாதிருக்கும் கொள்கையை கைவிட்டு சமஷ்டி முறைக்கான தீர்வுக்காவது இந்தியா முயற்சிக்க வேண்டுமென்றும் இக்குழு கூறியுள்ளது.

இந்திய தேர்தலில் சகல கட்சிகளும் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கை பிரச்சனைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றும் இக்குழு கோரியுள்ளது. [சி]

# மாவீரர் பெயரில் பாடசாலை இல்லங்கள்

(நாவற்குழி]

நாவற்குழி மகாவித்தியாலய விளையாட்டுப் போட்டியின்போது அங்குள்ள மூன்று இல்லங்களான சம்பந்தர் இல்லம் 'பக்கி' இல்லம் எனவும் அப்பர் இல்லம் 'அப்பன்' இல்லம் எனவும் சுந்தரர் இல்லம் 'அருள்' இல்லம் எனவும் மாற்றப்பட்டது.

பாடசாலை அதிபர் திரு. நா. சத்தியநாதன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியை கைதடிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. பரம் புலிக்கொடி ஏற்றி ஆரம்பித்து வைத்தார். இப்போட்டியின் போது 345 புள்ளிகளைப் பெற்று அருள் இல்லம் முதலாம் இடத்தையும், 321 புள்ளிகளைப் பெற்று அப்பன் இல்லம் இரண்டாம் இடத்தையும் 259 புள்ளிகளைப் பெற்று

(4-ம் பக்கம் மார்க்க)

# ஜனதா தள் கட்சி மூன்றாக பிளவுற்றது

(புதுடில்லி)

ஜனதாதள் கட்சி மூன்றாக பிளவடைந்துவிட்டது. புதிய கட்சியை அங்கீகரித்து தேர்தல் சின்னம் ஒதுக்குவதை தேர்தல் கமிஷன் இன்று அறிவிக்கும்

திரு வி பி. சிங் தலைமையிலான ஜனதாதள், பிரதமர் திரு. சந்திரசேர் தலைமையிலான ஜனதாதள் (எஸ்). குஜராத் முதலமைச்சர் திரு சிமன் பாய் பட்டேல் தலைமையிலான ஜனதா தள் (ஜி) என மூன்றாக ஜனதாதள் பிளவுற்றது

இதேவேளை இந்திய அரசியலில் கட்சிமாறுவது ஒருவழமையான தொழிலாக மாறிவிட்டது. மூன்று முன்னாள் மத்திய அமைச்சர்கள் ஜனதாதள் (எஸ்)லிருந்து காங்கிரஸ் கட்சிக்கு தாவிவிட்டனர்

டாக்டர் ஷகிலூர் ரகுமான் திரு. பாகே கோவர்த்தன், திரு. டஷவராஜ் பாட்டேல் ஆகியோரே இவ்வாறு கட்சி தாவியவர்களாவர். ஏற்கனவே திரு. வீ. சி. சுக்ளாவும் திருமதி உஷாசிங்கும் காங்கிரசுடன் இணைந்ததும் தெரிந்ததே [சி]

# 'பிரேமா'வின் புதியதிட்டங்கள் நிதி அமைச்சு அங்கலாய்ப்பு

## பொருமுகிறார் ஒரு அதிகாரி

[கொழும்பு]

ஜனாதிபதி பிரேமதாஸா அரசியல் கூட்டங்களில் மக்களை கவர அறிவிக்கும் புதுப்புது திட்டங்களால் நிதி அமைச்சு மிகுந்த சிரமமடைகிறதாம்

புதிய திட்டங்கள் அறிவிக்கப்படும் ஒவ்வொரு தடவையும் மேலதிகமாக ஒன்று-ஒன்றரை கோடி ரூபாக்களை நாம் தேடவேண்டிய நிலை ஏற்படுகிறதென தனது பெயரை குறிப்பிட வேண்டாமென கேட்டுக்கொண்ட பொருளியலாளர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு போரால் 7 லட்சம் அகதிகளை பராமரிக்க இவ்வருடம் 200 — 300கோடி ரூபா தேவைப்படுவதாகவும் அவர் கூறினார். (சி)

## தற்கொலை

(நாவற்குழி)

மட்டுவில்வடக்கைச்சேர்ந்த செல்லையா மாலினி என்ற 12 வயதுச்சிறுமி சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இரண்டு சகோதரிகளுக்கிடையிலே ஏற்பட்ட சர்ச்சையே இதற்குக் காரணம் எனப் கூறப்படுகின்றது. (107)

# யாழ்-கொழும்புகப்பல்சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும்

## யாழ். அரச அதிபர் தகவல்

(மானிப்பாய்)

யாழ்-கொழும்புப் பிரயாணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவையை விரைவில் ஆரம்பித்து வைக்கப்போவதாக யாழ். அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

கப்பல்துறை அமைச்சின் செயலாளராகப் பதவியுயர்வு பெற்றுச்செல்லும் அரசாங்க அதிபரைக் கௌரவித்து யாழ். செயலக ஊழியர்களால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்துபசார வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

''யாழ்ப்பாண மக்கள் கொழும்பு செல்வதற்கு மழையிலும், சேற்றுச் சகதியிலும், வெயிலிலும் கிடந்து கஷ்டப்படுகிறார்கள். இவர்களது இக் கஷ்டங்களைப் போக்குவதற்குக் கப்பல் போக்குவரத்துச் சேவை ஒன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில் நெருக்கடியான இக்கால கட்டத்தில் எமது மாவட்டத்துக்கு என்னால் முழுமையான சேவை யாற்ற முடியாவிட்டாலும் ஓரளவான சேவை என்றாலும் மக்களுக்கு செய்ய முடிந்தது என்றார்.

செயல்திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன், மேலதிக அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் பிரதான கணக்காளர் சிவபாலன் உட்பட இவரது சேவையைபாராட்டி பலர் உரை நிகழ்த்தினார்கள். (71)

# தமிழை கட்டாயம் கற்க வேண்டும்

(வவுனியா)

''பாடசாலை மாணவர்கள் அனைவரும் வருங்காலத்தில் தமிழ் மொழியை கற்றுக் கொள்ள வேண்டும்''.

இவ்வாறு கல்வி உயர் கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி வவுனியாவில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

வவுனியா செயலகத்தில் உயர்கல்வி அதிகாரிகளிடையே நடைபெற்ற கூட்டமொன்றில் அமைச்சர் அத்துலத்முதலி மேலும் கூறியதாவது:

வருங்காலத்தில் மாணவர்கள் அனைவரும் மும்மொழிகளையும் தெரிந்திருப்பது நல்லது குறிப்பாக தமிழ் மொழியை சகல மாணவர்களும் கட்டாயம் கற்றுகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் வருங்காலத்தில் மாணவர்களுக்கு பெரும்கஷ்டங்கள் ஏற்படலாமென்றும் அமைச்சர் தெரிவித்தார். (வி)

# மே 6-ம் திகதியிலிருந்து 12 வரை அரச ஊழியரின் லீவுகள் ரத்து

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு அடுத்த மாதம் 6ம் திகதியிலிருந்து, 12-ம் திகதி வரை எதுவித லீவுகளும் வழங்கப் படமாட்டாது என அரசு அறிவித்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களை சிறந்த முறையில் நடாத்துவதற்கு அரசஊழியர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம், ஆகவே மேற்படி தேர்தல் முடிவடையும் வரை அரசஊழியர்களுக்கும் திணைக்கள ஊழியர்களுக்கும் எக்காரணம் கொண்டும் லீவு வழங்க வேண்டாம் என சுற்றறிக்கை மூலம் நேற்று அரசு அறிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட நாட்களில் எந்த ஒரு ஊழியராவது முன்கூட்டியே லீவு எடுத்திருந்தால் அவை உடனடியாக ரத்துச் செய்யப்பட்டு விட்டதாக அந்த ஊழியர்களுக்கு உடன் அறிவிக்கும்படியும் அந்தச் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. [வி]

# கூரை இடிந்து விழுந்து ஐம்பது பேர் மரணம்

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்கா பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வந்த தொழிற்சாலையின் கூரை ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 50 பேர் பலியானதாகவும், 150 பேர் வரை இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன'

இப்பகுதிகளில் கடந்த சில நாட்களாகப் பெய்துவந்த அடைமழையின் காரணமாகவே மேற்படி விபத்து நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. (வி)

# போரில் பொதுமக்கள் பெருமளவு பாதிப்பு!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் யுத்தத்தில் அப்பாவிப் பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்படுவதை ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் ஒப்புக்கொண்டுள்ளார்:

வடக்கு-கிழக்கில் போராளிகளை எப்படிக் கட்டுப்படுத்துவது. அவர்களை எதன்மூலம் வெற்றிகொள்ளலாம் என்பதில் அரசுக்கு பெரும் தர்மசங்கடமும் ஏற்பட்டுள்ளதாம்.

கடந்த ஜூன் மாதத்தின் பின் நடைபெற்ற கடும் யுத்தத்தில் பெருமளவு பொதுமக்கள் கொல்லப்பட்டதையும் அரசு ஒப்புக்கொண்டுள்ளதாம். (வி)

### காரைநகர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நகரிலும், ஊர்காவற்துறையிலும் பல வீடுகள் சேதமடைந்தன. 11 வது நாளாக இத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

### உணவு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

லிகமாக அதனை இடைநிறுத்தி கொழும்பிலிருந்து கட்டுப்பாட்டு விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்த பின் தொடர்ந்து உணவு முத்திரைகளை செயற்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போதைய உணவுமுத்திரைத் தொடரில் உள்ள 12 புள்ளிகளுக்கும் பொருட்கள் வழங்கப்படுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (86)

### இராசி பலன்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

துலாம்: காரிய வெற்றி, அதிகயோசனை, குடும்பத்தில் மகிழ்ச்சி.

விருச்சிகம்: மனச்சுமை, பெண்பகை, அலைச்சல் அகால போஜனம்.

தனுசு: வேண்டாத தொல்லை, கடன்சுமை, குடும்ப பிரிவு.

மகரம்: இன சன மகிழ்ச்சி, புதியசிந்தனை, தொழில்லாபம்

கும்பம்: கற்பனை மிகுதி, மாமியார் தொல்லை, குடும்ப கஷ்டம்.

மீனம்: தொழில் மாற்றம், காரியதாமதம், பெரியோர் ஆசி.

— ஜோஸ்யர்

### மாவீரர் பெயரில்

3-ம் பக்கத் தொடர்ச்சி]

பக்கி இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

இப்பாடசாலையிலிருந்து போராட்டத்தில் இணைந்து மாவீரர்களின் நினைவாக தென்மராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. நறஞ்சன் வெற்றிக்கிண்ணம் ஒன்றைப் பரிசாகக் கொடுத்தார். (107)

### சுகாதார

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியில் ஏழாலை மேற்கு குடும்பநல சுகாதார சேவையாளர் செல்வி சித்திரா தம்பிஐயா அனைவருக்கும் நன்றி தெரிவித்தார் [வி]

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பல: நோ. கூ. சங்க பொது முகாமையாளர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று பி. ப. 02. 00 மணிக்கு யாழ். பல. நோ. கூ. சமாச கட்டிட மேல் மாடியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில்முக்கியமான சில முடிவுகள் எடுக்க வேண்டியுள்ளதால் சகல பல. நோ கூ. சமாச பொதுமுகாமையாளர்களையும் தவறாது சமூகம் கொடுக்கும் படி யாழ். மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர்.

### மூன்று நாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க - 'எம்-16' 'மினிமினி எல். எம். ஜியும், பெல்ஜியம் எம். என். ஜியும் சீனாவிடமிருந்து வை-12, வை - 8, வை - 5 விமானங்களும் சிறியரக ஆயுதங்களும், கடற்படை பீரங்கி படகுகளும் கொள்வனவு செய்யப்படுகிறது.

இது இராணுவ தேவையின் 33 வீதத்தை பூர்த்தி செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### இடம்பெயர்ந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திய திருச்சபை பலாலி முகாம் பகுதிகளான மயிலிட்டி தெற்கு, மயிலிட்டி வடக்கு பலாலி மேற்கு, பலாலி வடக்கு, கட்டுவன் மேற்கு ஆகிய கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நாளை காலை 9 மணி முதல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

## அஸாம், பஞ்சாப்பில் தேர்தல்

[புதுடில்லி]

அஸாம், பஞ்சாப்பில் தேர்தல் நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக நேற்று நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதற்கான ஏனைய விபரங்களை தேர்தல் கமிஷன் பின்னர் அறிவிக்கும் என தெரிவிக்கப்பட்டது. எனினும் ஜம்மு காஷ்மீரில் தேர்தல் நடாத்துவதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## உணவுப்பொருள் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 35வது ஆண்டுவிழா வையொட்டி நிலைய எல்லைக்குட்பட்ட வறிய கூலித்தொழிலாளர்கள் மற்றும் வருமானமற்றமக்களுக்கு இன்று அங்கலிக்கன் திருச்சபை குரு ஐசாக் செல்வரத்தினம் அடிகளாரால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

சரஸ்வதி சனசமூகநிலையத் தலைவர் பரா. கிருஷ்ணன் தலைமையில் இவ்வைபவம் நடைபெறவுள்ளது.

### அன்னைபூபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும். வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி பல்வேறு விடயங்கள் சம்பந்தப்பட்ட பல வினாக்களைக் கொண்டது. இவற்றுள் மாணவர்களின் சொந்தப் பிரதேசம் பற்றிய கேள்விகளும் அடங்குகின்றன.

இரண்டாவதுபகுதி கட்டுரை வரைதல் சம்பந்தப்பட்டது. இதில் அன்னை பூபதி பற்றிய கட்டுரையும் வேறு ஒரு கட்டுரையும் மாணவர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படும்.

இத்தப்பரீட்சைக்கு பதினோயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் தோற்றுகிறார்கள். (வி)

### இரவுநேரம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழர்கள் பணத்தைக் கொடுத்து தங்கள் உயிரைக் காப்பாற்றியுள்ளதாகத் தெரியவருகிறது. (56)

### இனப்பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விதமானதொரு பேச்சுவார்த்தையுமின்றி தொடர்கிறது. இதனை நிறுத்த எந்தத் தரப்பும் முயலவில்லையென்றும் இவ்வானொலி கூறுகிறது

மேலும் வடக்கு-கிழக்கில் தற்போது மிகமோசமானதொரு யுத்தம் இடம்பெறுவதாகவும் கூறியது. (சி)

### வடக்குகிழக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ள ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஈழதமிழ் அகதிகளை இலங்கைக்கு அழைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

### மாந்தைப் பகுதி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

புலிகள் கடும் தாக்குதலை நடத்தினார்கள், நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் மாந்தைப்பகுதியிலிருந்து இரு பொம்மர்கள், ஒரு அவ்ரோ விமானம், ஒரு ஹெலிகொப்டர் ஆகிய விமானங்களின் உதவியுடன் மூன்றுபவல், இரண்டு ஆமட்கார், ஒரு லொறி ஆகிய வாகனங்களில் பரவலாக சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேறி வந்தனர்

முன்னேறியஇராணுவத்தை புலிகள் இடைமறித்து கடுமையான தாக்குதலை நடத்தினார்கள்

இதேவேளை நாளுட்டான் பகுதியிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முருங்கன் பகுதியை நோக்கி முன்னேறிச் செல்கையில் ஆண்டான் செட்டி என்னுமிடத்தில் வைத்துப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினார்கள்,

இத் தாக்குதல்களின்போது இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (வி)

### யுத்தத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மென அரசுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது

## நினைவாலயம்

[யாழ்ப்பாணம்]

கரும்புலி கப்டன் தாடி சிறீஅண்ணா, மேஜர் சுபாஷ் லெப். ஹரன், லெப். அல்பேர்ட், ஆகிய வீரவேங்கைகளின் நினைவாலயம் இம் மாதம் 14-ஆம் திகதி திருநெல்வேலி ஆலடிச் சந்தியில் திறந்து வைக்கப்படவுள்ளது

கடந்த இரு வருடங்களுக்கு முன் இப்பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இந்தப் போராளிகள் இறந்தது குறிப்பிடத்தக்கது. (வி)

## வீரமரணம்

(மன்னார்)

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்துக்கும் மாந்தையில் ஏற்பட்ட நேரடி மோதலில் 3 விடுதலைப் புலிப் போராளிகள்வீரமரணமடைந்தனர்.

2-வது லெப். துரைக்குட்டி, நாயகன், விஜயன் ஆகிய போராளிகளே வீர மரணமடைந்தவர்களாவர்.

விடுதலைப் புலிகள் இவர்களுக்குதமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். [க-வி]

### வீரவணக்கம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்-அராலி வடக்கு) ஆகிய இரு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்

மேற்படி இரு வீரவேங்கைகளின் புகழுடல்கள் இன்று காலை 9 மணி முதல் 11 மணி வரை பொதுமக்களின் அஞ்சலிக்காக நவக்கிரி குட்டி பாலர் பாடசாலையில் வைக்கப்பட்டு. ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனம் செய்யப்படும் (வி)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under licence Number [illegible]